**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.269/2013**

**வா.சா. 1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | அடைக்கன் |
| தகப்பனார் பெயர் | : | பழனியாண்டி |
| வயது | : | 58/2024 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | அய்யலூர், தீத்தாகிழவனூர் |
| தாலுகா | : | வேடசந்தூர் |
| மாவட்டம் | : | திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 27.08.2024 ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஒட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய உண்மையான பெயர் அடைக்கன். என் தந்தை பெயர் பழனியாண்டி. பழனியாண்டியின் தந்தை பெயர் குமரன் அம்பலம். என் தந்தைக்கு பழனியாண்டியை மூக்கன் என்றும் பட்டப்பெயர் வைத்து அழைப்பார்கள். தற்போது என்னுடைய தந்தை பழனியாண்டி உயிருடன் இல்லை. என் தாயார் பெயர் தெய்வாயம்மாள். என்னுடன் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் 3 நபர்கள் ஆவார்கள். என்னுடைய சகோதரர் பெயர் கணேசன் அவர் இறந்து விட்டார். என்னுடைய அக்கா குமராயி, தங்கை நீலியம்மாள். என்னுடைய தம்பி கணேசன் திருமணம் ஆகாமல் 27 வயதில் இறந்து விட்டார். எனது தந்தை சுமார் 75 வயதில் இறந்தார். அவர் தேங்காய் வியாபாரம் செய்தார். என்னுடைய தந்தை இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் இவ்வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தந்தை இறப்பு சான்றிதழை

இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை இறந்த பிறகு அதற்குரிய வாரிசு சான்றிதழை இவ்வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேலும் அந்த வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய தந்தையின் பெயரில் அய்யலூர் கிராமத்தில் உள்ள சர்வே எண்.1089 ல் நிலம் உள்ளதா என்றால் உள்ளது. தாவா வழக்கின் சொத்து விவரம் எனக்கு தெரியும். தாவா வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 1 1/2 ஏக்கர் இருக்கும். தாவா வழக்கு சொத்தின் சர்வே எண்.1057/6A, சர்வே எண்.1057/7, சர்வே எண். 684/2 ஆகும். மேற்கண்ட தாவா சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி தாவா சொத்துக்களுக்குரிய என் தந்தை மற்றும் என் பாட்டா பெயரில் உள்ள பட்டாக்களை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் எப்படி யாருக்கு பாகப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by G ASHOK PRASATH

**Principal District Munsif**
**Vedasandur**